## பொலிஸ் வெகுமதி நிதியம் - 2015

பொலிஸ் வெகுமதி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் பொலிஸ் கட்டளைச்சட்டத்தின் 74(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பொலிஸ் வெகுமதி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொலிஸ் அனுசரணை நிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 2,000,000 தொகையான முற்பணத்தை தீர்ப்பனவு செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படாமல் 16 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக காணப்பட்டிருந்தது.

(ஆ) 2001 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 33,241,336 கூட்டுமொத்தமான விசேட வெகுமதிகள் சட்ட நடவடிக்கைகள் முடிவுபெறாதமையால் மீளாய்வாண்டின் இறுதி வரை குறித்த உத்தியோகத்தர்களிற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமதிகளுக்கும் பொலிஸ் தலைமையகத்தின் வெகுமதி பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலிலுள்ள வட்டி வருமதிகளுக்கும் இடையில் ரூபா 1,150,000 வித்தியாசம் அவதானிக்கப்பட்டிருந்தது. எனினும், இத்தகைய இரு மீதிகளையும் இணக்கம் செயவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான நேரொத்த ரூபா 896,375,737 மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 909,174,670 மிகையினை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 12,798,933 ஆன முன்னேற்றமொன்றைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டிற்கான வெகுமதிக் கொடுப்பனவில் குறிப்பிடத்தக்களவு குறைவு காணப்பட்டமையே இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணியாக பங்களித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

**வெகுமதிகளின் கொடுப்பனவு**

பிரதம பொலிஸ் மா அதிபரின் கீழுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களை அவர்களுக்கு வெகுமதிகளை வழங்குவதன் மூலம் அவர்களுடைய கடமைகளை வினைத்திறனான முறையில் செய்ய வைப்பதற்காக அவர்களை ஊக்குவித்தலும் பொலிஸிற்கு தேவையான

தகவல்களை வழங்கும் சிவில் நபர்களுக்கான வெகுமதிக் கொடுப்பனவுகளை ஊக்குவித்தலும் நிதியத்தின் முக்கிய நோக்கங்களாகும். இந்த நோக்கங்களுக்காக, மீளாய்வாண்டிலும் முன்னைய ஐந்து ஆண்டுகளிலும் செலுத்தப்பட்ட வெகுமதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| (i) பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கான வெகுமதிக் கொடுப்பனவு | 400.6 | 415.3 | 422.7 | 585.2 | 534.8 | 407.2 |
| (ii) பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கும் சிவில் நபர்களிற்கும் செலுத்திய விசேட வெகுமதிகள் | 17.3 | 15.5 | 12.1 | 33.1 | 28.1 | 28.4 |
| (iii) பொலிஸ் உத்தியோகத்தர்களிற்குச் செலுத்திய மோட்டார் போக்குவரத்து வெகுமதிகள் | 148.2 | 163.1 | - | - | - | - |
| மொத்தம் | 566.1 | 593.9 | 434.8 | 618.3 | 562.9 | 435.6 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கும் சிவில் நபர்களிற்கும் வெகுமதிகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும், வெகுமதிகள் செலுத்தப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த வெகுமதிக் கொடுப்பனவு கடந்த நான்கு வருடங்களில் குறைவடைந்திருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களிற்கும் இடையே குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு ஆக்கபூர்வமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

**6 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

-------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| (அ) காசுப்புத்தகத்தின் பராமரிப்பு | | -பல சந்தர்ப்பங்களில் பிழை திருத்த திரவம் பயன்படுத்தி காசுப்புத்தகம் மாற்றப்பட்டிருந்தது. |
| (ஆ) மோட்டார் போக்குவரத்து தண்டப்பணங்களின் கணக்கீடு | - | காலதாமதமின்றி தண்டப்பணத்தை சேகரித்தலும் பொருத்தமான சீராக்கங்களை கணக்குகளில் மேற்கொள்ளுதலும் |